සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

07.08.2019 / 0830 – 1030

කර්ණාටක සංගීතය I
கர்நாடக சங்கீதம் I
Carnatic Music I

55 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** 'பாஹிமாம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி' எனும் சௌக்ககாலக் கிருதி அமைந்த இராகம்
(1) பிருந்தாவனி (2) ஜனரஞ்ஜனி (3) சுத்தஸாவேரி (4) பிலஹரி (5) மோகனம்

**2.** ஷண்முகப்பிரியா இராகத்தின் சாயலை நன்கு வெளிப்படுத்தும் கமகம் யாது?
(1) ஸ்புரித கமகம் (2) டாலு கமகம் (3) ஆரோஹண கமகம்
(4) பிரத்தியாகத கமகம் (5) அவரோஹண கமகம்

**3.** 72 மேளகர்த்தாவில் நான்காவது சக்கரத்தில் வரும் 3 ஆவது இராகம்
(1) சூர்யகாந்தம் (2) நடபைரவி (3) கீரவாணி
(4) கரஹரப்பிரியா (5) மேசகல்யாணி

**4.** நாதஸ்வரம் ஒரு
(1) கான வாத்தியம் (2) சுருதி வாத்தியம் (3) லய வாத்தியம்
(4) ஸாதக வாத்தியம் (5) ஸ்திர வாத்தியம்

**5.** 'மாதயை' எனும் சௌக்ககாலக் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் மேள எண்
(1) 15 (2) 16 (3) 17 (4) 22 (5) 28

**6.** வீணையை ஒத்த ஹிந்துஸ்தானி இசைக்கருவி
(1) மெண்டலின் (2) ஸரோட் (3) கோட்டு வாத்தியம்
(4) சாரங்கி (5) ஸிதார்

**7.** க்ஷேத்ரக்ஞரால் பாடப்பட்ட முதலாவது பதம்
(1) எவ்வடே ஓபாமா (2) ஸ்ரீபதி சுதுவாரிகி (3) பாலவினவே
(4) ஏமோ தெலியது (5) அலிகிதே

**8.** 7 ½ ஸ்தாயிகள் வரை வாசிக்கக்கூடிய வாத்தியம்
(1) கிளாரினட் (2) தவில் (3) நாதஸ்வரம் (4) பியானோ (5) புல்லாங்குழல்

**9.** பஞ்சரத்தினக் கீர்த்தனைகளில் இறுதிக் கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
(1) ஸ்ரீ (2) நாட்டை (3) கௌளை (4) ஆரபி (5) வராளி

**10.** சங்கீதரத்னாகரத்தில் குறிப்பிடப்படும் கமகங்களின் எண்ணிக்கை
(1) 10 (2) 14 (3) 15 (4) 16 (5) 19

**11.** ஸரிகமதாநிஸ் - ஸ்நிஸ்தாபமபகாமரிஸ என்னும் ஆரோஹண - அவரோஹணம் குறிப்பிடும் இராகம்
(1) காம்போஜி (2) ஸ்ரீ ரஞ்சனி (3) சாருகேசி
(4) கானடா (5) ஜனரஞ்சனி

**12.** பதநி - மபதநி - கமபதநி - ரிகமபதநி - கமபதநி - மபதநி - பதநி என்ற முறையில் வருவது
(1) கோபுச்ச யதி (2) ஸ்ரோதோவக யதி (3) மிருதங்க யதி
(4) டமரு யதி (5) விஷம யதி

**13.** பின்வருவனவற்றுள் ஹிந்துஸ்தானி இசைக் கச்சேரியில் **இடம்பெறாத** ஓர் அம்சம்
(1) தனியாவர்த்தனம் (2) இராக ஆலாபனை (3) பக்கவாத்தியம்
(4) கற்பனாஸ்வரம் (5) பல்லவி

**14.** 'தரு' எனும் இசை உருப்படி இடம்பெறுவது
(1) கீதகோவிந்தத்தில் ஆகும். (2) பஞ்சரத்தினக் கீர்த்தனைகளில் ஆகும்.
(3) நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ஆகும். (4) திருவாசகத்தில் ஆகும்.
(5) இராம நாடகக் கீர்த்தனைகளில் ஆகும்.

**15.** "மைம்மரு பூங்குழல்..." எனும் தேவாரம் அமைந்த பண்ணும் அதற்கு இணையான இராகமும் முறையே
(1) நட்டபாடை, நாட்டை (2) நட்டபாடை, கம்பீரநாட்டை
(3) நட்டபாடை, சலநாட (4) தக்கராகம், கம்பீரநாட்டை
(5) பழம்பஞ்சுரம், சங்கராபரணம்

**16.** 'ஞானம் அருள்வாய்' எனும் கீர்த்தனையின் அனுபல்லவி ஆரம்பிக்கும் எடுப்பு
(1) சமம் (2) அதீதம் (3) விசமம்
(4) அனாகதம் (5) விச்ராந்தி


**17.** இலங்கையின் இசை வளர்ச்சியில் சிறு பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் பாடல் வகை **அல்லாதது**
(1) கப்பற்பாடல் (2) மெல்லிசை (3) அரிவு வெட்டும் பாடல்
(4) ஒப்பாரி (5) காவடி

**18.** புரந்தரதாஸரைத் தொடர்ந்து கீதங்களை இயற்றிய வாக்கேயகாரர்
(1) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் (2) திருவொற்றியூர் தியாகையர்
(3) வீணை குப்பையர் (4) தச்சூர் சிங்கராச்சாரியார்
(5) ஸ்வாதித்திருநாள் மகாராஜா

**19.** தாளத்தின் அங்கங்களுள் வீச்சு, விரல் எண்ணிக்கை, கிருஷ்யை, ஸர்ப்பிணி, பதாகம் என்னும் அங்கங்களைச் செய்கையில் காட்டுவது
(1) சித்திரதர மார்க்கம் (2) ஸஸப்தகிரியை (3) நிஸப்த கிரியை
(4) புலுதம் (5) பிரஸ்தாரம்

**20.** பின்வருவனவற்றுள் அஷ்டபதி இயற்றப்பட்ட காலப்பகுதி
(1) 10 ஆம் நூற்றாண்டு (2) 12 ஆம் நூற்றாண்டு (3) 15 ஆம் நூற்றாண்டு
(4) 16 ஆம் நூற்றாண்டு (5) 17 ஆம் நூற்றாண்டு

**21.** கீழ்வரும் படங்களுள் சுருதி நிர்ணயிக்கப்பட்ட வாத்தியம் யாது?



(1) (2) (3) (4) (5)

**22.** ஹிந்துஸ்தானி இசையில் முதலாவதாகக் கற்பிக்கப்படும் இராகம்
(1) கமாஜ் தாட் (2) பைரவ தாட் (3) பூர்வி தாட் (4) பிலாவல் தாட் (5) மார்வா தாட்

**23.** கர்நாடக சங்கீத குரலிசைக் கச்சேரியில் பிரதானமாக இடம்பெறும் வாத்தியங்கள்
(1) வயலின், கெஞ்சிரா (2) வயலின், மிருதங்கம் (3) மிருதங்கம், கடம்
(4) கெஞ்சிரா, கடம் (5) புல்லாங்குழல், மிருதங்கம்

**24.** 72 மேளகர்த்தாச் சக்கரத்தில் பவப்ரியா, ஸுவர்ணாங்கி, திவ்யமணி ஆகிய இராகங்கள் இடம்பெறும் சக்கரம்
(1) வஸு (2) அக்னி (3) திசி (4) பாண (5) ருத்ர

**25.** கீதம், ஆலாபம், டாயம், பிரபந்தம் என்பவற்றின் விளக்கத்தைக் கூறும் நூல்
(1) அஷ்டபதி (2) தமிழிசை வளம் (3) பல்லவி சேஷ பிரபந்தம்
(4) கீர்த்தனா சாகரம் (5) சதுர்த்தண்டிப் பிரகாசிகை

**26.** படத்தில் காட்டப்பட்டுள்ள ஆரோஹண-அவரோஹண ஸ்வரஸ்தான வரைபடம் குறிக்கும் இராகம்


(1) மோஹனம்

(2) பந்துவராளி

(3) ஹிந்தோளம்

(4) கல்யாணி

(5) ஹம்ஸத்வனி




**27.** ஸ்வர ஸஞ்சாரங்களை ஆக்குவதன் மூலம் வெளிப்படும் திறன்கள்,
(1) லயஞானம், ஸ்வரஞானம் (2) தாளஞானம், சாகித்தியஞானம்
(3) இராகஞானம், இசைஞானம் (4) மொழித்திறன், கற்பனைத்திறன்
(5) ஸ்வரஞானம், சாகித்தியஞானம்

**28.** 'ஆரபிமானம்' எனும் இராகமாலிகையில் இடம்பெறும் தாய்ராகம்
(1) ஆனந்தபைரவி (2) சங்கராபரணம் (3) பைரவி
(4) பூர்விகல்யாணி (5) கல்யாணி

**29.** ஹிந்துஸ்தானி இசையில் காணப்படும் ஷாடவ இராகங்கள்
(1) பூபாலி, பூர்யா (2) மார்வா, பூர்யா (3) யமன், பிலாவல்
(4) மார்வா, யமன் (5) யமன், பூர்யா

**30.** 'பார்வதி நாயகனே' எனும் கீர்த்தனையின் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்றவற்றின் தொடக்கத்தில் வரும் அணி
(1) மத்யமகால சாகித்தியம் (2) சொற்கட்டுஸ்வரம் (3) மகுட சாகித்தியம்
(4) ஸ்வராட்சரம் (5) மணிப்பிரவாளம்

**31.** கர்நாடக இசையில் பிரதிமத்திம ஸ்வரஸ்தானத்திற்குப் பொருத்தமான மேலைத்தேய ஸ்வரப் பெயர்
(1) D (2) G (3) B (4) E flat (5) F Sharp

**32.** சங்கீரண தாள அமைப்புக்களைத் தமது பாடல்களில் கையாண்டவர்
(1) அபிராமிப்பட்டர் (2) விபுலாநந்த அடிகள் (3) அருணகிரிநாதர்
(4) இராமலிங்க வள்ளலார் (5) அருணாசலக் கவிராயர்

**33.** வீணை பாலச்சந்தருக்கு டாக்டர் பட்டம் வழங்கிய நிறுவனம்
(1) அகில உலக நுண்கலைக் கலாசார அகடமி (2) கிருஷ்ணகான சபா
(3) பாரதீய வித்யாபவன் (4) சென்னைப் பல்கலைக்கழகம்
(5) பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**34.** சமஷ்டி சரணம் அமைந்த கிருதிகளில் **இடம்பெறாத** அங்கம்
(1) பல்லவி (2) உப பல்லவி (3) அனுபல்லவி (4) சரணம் (5) அனுசரணம்

**35.** "கருவினுருவாகி..." எனும் திருப்புகழ் அமைந்துள்ள சந்தம்
(1) தானத் தத்தத் தான தத்தன தனத்தான
(2) தன தனன தன தனன தானத்தான தனத்தான
(3) தானத் தனத் தானத் தனத் தனத் தான
(4) தனன தன தான தந்தந் தனனதன தானதந்த
(5) தனன தன தனன தன தனன தன தனத்தான

**36.** ஆனந்தபைரவி இராகத்தில் இடம்பெறும் அன்னியஸ்வரங்கள்
(1) பிரதி மத்யமம், சுத்த மத்யமம் (2) அந்தர காந்தாரம், காகலி நிஷாதம்
(3) அந்தர காந்தாரம், சுத்த ரிஷபம் (4) சுத்த தைவதம், அந்தர காந்தாரம்
(5) அந்தர காந்தாரம், சுத்த நிஷாதம்

**37.** திருநாவுக்கரசு நாயனாரது திருநேரிசைப் பதிகம் பாடப்படும் பண்
(1) கௌசிகம் (2) சாதாரி (3) சீகாமரம் (4) கொல்லி (5) குறிஞ்சி

**38.** இலங்கையில் வழக்கிலுள்ள கீபோர்ட் (Keyboard) வகைகளின் எண்ணிக்கை
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

**39.** பல்லவி சேஷய்யரால் தொடர்ச்சியாக 8 மணிநேரம் பாடப்பட்டதாகக் குறிப்பிடப்படும் இராகம்
(1) வசந்தா (2) ஸாவேரி (3) கீரவாணி
(4) ஷண்முகப்ரியா (5) பைரவி

**40.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - இசைஞானியார், தாளச்செல்வர், முத்தமிழ் அரசு எனச் சிறப்பிக்கப்படுபவர்.

B - திருவிராகம், மாலைமாற்று, திருவெழுக்கூற்றிருக்கை ஆகிய உருப்படிகள் செய்தவர்.

C - குறவஞ்சி, உலா, பள்ளுப் பாடல்கள் என்பவற்றை இதிகாசங்களை மையமாகக்கொண்டு இயற்றியவர்.

D - பிரபுடதேவ மகாராஜரின் காலப்பகுதியில் வாழ்ந்தவர்.

E - 10 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்தவர்.

மேற்குறிப்பிட்டவற்றுள் அருணகிரிநாதருடன் தொடர்புபட்ட கூற்றுகள் காணப்படும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, B (2) A, D (3) B, C (4) C, E (5) D, E

**41.** படத்தில் காட்டப்பட்டுள்ள வாத்தியத்தில் A, B, C குறிக்கும் பாகங்கள் முறையே


(1) யாளி, பிருடை, மெட்டு

(2) யாளி, மேரு, மெட்டு

(3) குதிரை, பிருடை, தந்தி

(4) குதிரை, லங்கர், கோடு

(5) யாளி, பிருடை, குதிரை




**42.** அமீர் குஸ்ரு என்பவருக்கு 'அமீர்' எனும் பட்டத்தை வழங்கியவர்

(1) மொகமட் கௌஸ் (2) ஜலால் உத்தின் - கில்ஜி (3) ராஜா மான்சிங்

(4) தான்சேன் (5) மொகமட் அலிகான்

**43.** 'தீம் தனன...' என்ற பிருந்தாவனி இராகத் தில்லானாவை இயற்றியவரின் முத்திரை

(1) குருகுஹ (2) மாதுரி (3) முரளி (4) கிருஷ்ணா (5) வேங்கட

**44.** காற்றின் மூலம் ஒலியை ஏற்படுத்தும் மேலைத்தேய வாத்தியங்கள்

(1) பியானோ, புல்லாங்குழல் (2) பியானோ, கிற்றார் (3) நாதஸ்வரம், கிளாரினட்

(4) சக்ஸபோன், ஓர்கன் (5) கிளாரினட், சக்ஸபோன்

**45.** 'சிவ சிவ சிவயென ராதா' எனும் கீர்த்தனையின் இரண்டாவது சரணம் ஆரம்பிக்கும் ஸாகித்யம்

(1) ஆகம முலு நுதியிஞ்சி பஹு (2) காமா துலதெக கோஸி

(3) பாகவ துலதோ போஷிஞ்சி வர (4) ஸொகஸுலூர ஹொயலு கோரி

(5) சந்ததமும் நான் ஸாரங்கபாணி தேவி

**46.** பின்வருவனவற்றுள் கலப்பு இராகம் எனப்படுவது யாது?

(1) கன பஞ்சக இராகம் (2) சுத்த இராகம் (3) சாயாலக இராகம்


(4) சங்கீர்ண இராகம் (5) பாஷாங்க இராகம்

**47.** வஸந்தா இராகத்தின் மத்யமத்தினைக் கிரகபேதம் செய்யும்போது தோன்றும் இராகம்

(1) வஸந்தபைரவி (2) ஆனந்தபைரவி (3) சாமா

(4) ரீதிகௌளை (5) ரமணி

● **48** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள மேலைத்தேய லிபிமுறையை அவதானித்து விடை அளிக்குக.



**48.** லிபி முறையில் கொடுக்கப்பட்டுள்ள ஆரோஹண - அவரோஹணம் குறிப்பிடும் இராகம்
(1) கல்யாணி (2) ஹரிகாம்போதி (3) பந்துவராளி
(4) ஆபோகி (5) ஷண்முகப்ரியா

**49.** லிபி முறையில் குறிக்கப்பட்டுள்ள இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள்
(1) ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைஷிகி நிஷாதம்.
(2) ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம்.
(3) ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், பிரதி மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம்.
(4) ஸட்ஜம், சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், பிரதி மத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்.
(5) ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைஷிகி நிஷாதம்.

**50.** ♭ எனும் அடையாளம் குறிப்பிடும் ஸ்வரஸ்தானம்

(1) சதுஸ்ருதி தைவதம் (2) சுத்த தைவதம் (3) காகலி நிஷாதம்
(4) கைஷிகி நிஷாதம் (5) பஞ்சமம்

❊ ❊ ❊

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம

| විෂය අංකය பாட இலக்கம் | 55 | විෂයය பாடம் | கர்நாட சங்கீதம் |
|---|---|---|---|

ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 1 | 31. | 5 | 41. | 1 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 4 | 32. | 3 | 42. | 2 |
| 03. | 3 | 13. | 1 | 23. | 2 | 33. | 1 | 43. | 3 |
| 04. | 1 | 14. | 5 | 24. | 1 | 34. | 3 | 44. | 5 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 5 | 35. | 4 | 45. | 1 |
| 06. | 5 | 16. | 4 | 26. | 3 | 36. | 2 | 46. | 4 |
| 07. | 2 | 17. | 2 | 27. | 1 | 37. | 4 | 47. | 5 |
| 08. | 4 | 18. | 1 | 28. | 5 | 38. | 5 | 48. | 2 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 2 | 39. | 2 | 49. | 1 |
| 10. | 3 | 20. | 2 | 30. | 4 | 40. | 2 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

08.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **'அ'** பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் **'ஆ'** பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் **'இ'** பகுதியில் இருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## 'அ' பகுதி

1. (i) 72 மேளகர்த்தாச் சக்கரத்தில் விவாதி மேளங்களின் எண்ணிக்கை யாது?

(ii) தாதுவின் அமைப்பில் கீதத்தை ஒத்திருக்கும் உருப்படி வகை யாது?

(iii) யாழ்நூல் எத்தனை இயல்களைக் கொண்டது?

(iv) சின்னத்தம்பிப் புலவரால் இயற்றப்பட்ட தூது இலக்கியத்தின் பெயரினைத் தருக.

(v) 'குஜரி' எனும் பாகத்தைக் கொண்ட வாத்தியம் யாது?

(vi) 'எவரெஸ்ட்', 'றொக்கட்' என்ற பாராட்டுக்களைப் பெற்ற இசைக்கலைஞரின் பெயரினைத் தருக.

(vii) இரு இசைக்கலைஞர்களால் இருவேறு இசை முறைகளை ஒரே மேடையில் இசைக்கும் கச்சேரிமுறை யாது?

(viii) மிஸ்ரஜாதி அடதாளம், கண்ட கதிபேதம் அடையும்போது உண்டாகும் மொத்த எண்ணிக்கை யாது?

(ix) 'தெலி செவக லெல்ல' என்ற ஜாவளியை இயற்றியவர் யார்?

(x) $\underset{8}{\cup}$ இக்குறியீடு குறிக்கும் அங்கத்தின் பெயர் யாது?

(xi) கதக் நடனத்திற்குப் பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் **இரண்டு** வாத்தியங்களின் பெயர்களைத் தருக.

(xii) காம்போதி இராகத்திற்கு இணையான பண்கள் **இரண்டினைத்** தருக.

(xiii) திவிதீய கனபஞ்சக இராகங்கள் **இரண்டினைத்** தருக.

(xiv) இலங்கையில், இசை வளர்ச்சிக்குப் பங்காற்றிய நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(xv) வேங்கடமகி அவர்களின் முத்திரைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

## 'ஆ' பகுதி

**2.** (i) ஜனக இராகத்தின் **நான்கு** இலட்சணங்களையும் எழுதுக. (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் ஜன்ய இராக வகைகளை விளக்கி, ஒவ்வொன்றிற்கும் **இரண்டு** உதாரணங்களை ஆரோஹண - அவரோஹணங்களுடன் தருக.

(அ) உபாங்க இராகம்

(ஆ) பாஷாங்க இராகம்

(இ) தைவதாந்திய இராகம் ($3 \times 2 = 06$ புள்ளிகள்)

(iii) வர்ஜ இராக வகைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) வக்ர இராகங்களை விளக்கி, அவற்றின் பிரிவுகளை ஒவ்வொரு உதாரணத்துடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** பின்வரும் இசை உருப்படிகளுள் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றினை விளக்குக.

(i) பஞ்சபுராணங்களில் தேவாரத்திற்கு அடுத்ததாகப் பாடப்படும் உருப்படி

(ii) சூளாதி

(iii) இசைக்கச்சேரி, நாட்டியக் கச்சேரிகளின் இறுதியில் இடம்பெறும் உருப்படி ($10 \times 2 = 20$ புள்ளிகள்)

## 'இ' பகுதி

**4.** (i) கிருதிகளை அலங்கரிக்கும் அணிகளுள் மாது சம்பந்தமான அணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) மாது சம்பந்தமான அணிகளுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) சொற்கட்டு ஸ்வரம், சொற்கட்டு சாகித்தியம் என்பவற்றை உதாரணங்களுடன் விளக்கி, அவற்றிற்கிடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iv) மத்தியமகால சாகித்திய அணியினை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**5.** (i) 20 ஆம் நூற்றாண்டில் பிரபல்யம் பெற்ற இந்திய இசைக் கலைஞர்களுள் பெண் இசைக் கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக. ($2 \times 2 = 04$ புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெயரிட்ட பெண் இசைக்கலைஞர்கள் **இருவரினதும்** வாழ்க்கை வரலாற்றினை தனித்தனியே எழுதுக. ($4 \times 2 = 08$ புள்ளிகள்)

(iii) அப்பெண் இசைக்கலைஞர்கள் கர்நாடக இசைக்காற்றிய பணியினை விவரிக்குக. ($4 \times 2 = 08$ புள்ளிகள்)

**6.** பின்வரும் இராகங்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)

(i) ஹிந்தோளம்

(ii) மூன்று அன்னியஸ்வரங்களைக் கொண்ட ஔடவ வக்ர சம்பூர்ண இராகம்

(iii) பைரவி

(iv) கமதநி - தமகரி - நிநிதம - தநிஸ்ா என்னும் சஞ்சாரத்திற்குப் பொருத்தமான ஷாடவ இராகம் ($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**7.** (i) வயிற்றுடன் அணைத்துக்கொண்டு வாசிக்கப்படும் துணைத்தாள வாத்தியத்தினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட வாத்தியத்தினை வரைந்து, அதன் பாகங்களைக் குறித்துப் பெயரிடுக. (06 புள்ளிகள்)

(iii) கெஞ்சிரா வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி, இவ்வாத்தியத்தினை வாசிப்பதில் பிரபல்யமான கலைஞர்கள் **மூவரின்** பெயர்களைத் தருக. (06 புள்ளிகள்)

(iv) முகர்சிங் வாத்தியம் வாசிக்கப்படும் முறையினை விளக்குக. (06 புள்ளிகள்)

**8.** 20 ஆம், 21 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் கர்நாடக இசையின் வளர்ச்சி பற்றி விளக்குக.

**அல்லது**

நீர் பார்த்து இரசித்த கர்நாடக இசைக்கச்சேரி ஒன்றில் இடம்பெற்ற மனோதர்ம சங்கீதப் பிரிவுகளை இனங்கண்டு அவை பற்றி விமர்சிக்குக. (20 புள்ளிகள்)

## பகுதி II

### 'அ' பகுதி

(i) 40

(ii) சூளாதி

(iii) ஏழு இயல்கள்

(iv) பஞ்சவண்ணத்தூது

(v) தபேலா

(vi) தவில் தட்சணாமூர்த்தி

(vii) ஜுகல் பந்தி

(viii) 90

(ix) பட்டாபிராமையா / பட்டாபிராமையர்

(x) குரு விராமம்

(xi) ஸாரங்கி, தபேலா

(xii) தக்கேசி, தக்கராகம்

(xiii) கேதாரம் , நாராயணகௌளை, ரீதிகௌளை, சாரங்கநாட்டை, பௌளி

(xiv) வட இலங்கை சங்கீத சபை , யாழ் ரஸிக ரஞ்சன சபா, அகில இலங்கை ஆசிரியர் சங்கம், இசைப்பேரவை, கொழும்பு தமிழ்ச்சங்கம், இசைக்கலைஞர் சம்மேளனம், சங்கீத வித்துவ சபை, அண்ணாமலை தமிழிசை மன்றம், அளவெட்டி இசைக்கலை மன்றம் , முத்தமிழ் மன்றம், இலங்கை சங்கீத சபை, யாழ் இளங்கலைஞர் மன்றம், கம்பன் கழகம், திருகோணமலை தட்சணகானசபா, மட்டக்களப்பு சங்கீத சபை, கண்டி நுண்கலை மன்றம், கொழும்பு சைவமங்கையர் கழக இசைப்பிரிவு, வடமராட்சி அரங்கக் கலாசாலை , றம்பொடை தொண்டமான் நுண்கலைக் கல்லூரி, பண்டாரவளை நுண்கலைக் கல்லூரி .

(xv) கோவிந்தமகி, நாதாம்பிகா சுத வெங்கடாத்வரி , கோவிந்தாத்வரி, வேங்கட வைத்திய நாதர்

## ‘ஆ’ பகுதி

**வினா இல : 02**

(i) **ஜனக இராகத்தின் நான்கு இலட்சணங்களையும் எழுதுக.**

- சம்பூர்ண ஆரோஹண – அவரோஹணம்
- கிரம சம்பூர்ண ஆரோஹண – அவரோஹணம்
- ஆரோஹணத்திலும் அவரோஹணத்திலும் ஸ்வரங்கள் ஒரே வகையாக இருத்தல்.
- அஷ்டமாக விளங்கும் ஆரோஹண – அவரோஹணம்

(1 +1 +1+ 1 = 04 புள்ளிகள்)

(ii) **பின்வரும் ஜன்னிய இராக வகைகளை விளக்கி, ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்களை ஆரோஹண அவரோஹணங்களுடன் தருக.**

**(அ) உபாங்க இராகம்**

ஒரு ஜன்னிய இராகமானது தனது தாய் இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்களை மட்டும் எடுத்துக் கொள்ளுமாயின் அது உபாங்க இராகமாகும்.

உதாரணம் : (i) மோஹனம் ஆ : ஸரிகபதஸ்
அ : ஸ்தபகரிஸ } 28 இன் ஜன்னியம்

இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம் ஆகியவையாகும். இந்த ஸ்வரஸ்தானங்களை தனது தாய் இராகமாகிய ஹரிகாம்போதி இராகத்திலிருந்து எடுத்துக் கொள்ளுகின்றது.

உதாரணம் (ii) ஆரபி ஆ : ஸரிமபதஸ்
அ : ஸ்நிதபமகரிஸ } 29இன் ஜன்னியம்

இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் ஆகியவையாகும். இந்த ஸ்வரஸ்தானங்களை தனது தாய் இராகமாகிய தீரசங்கராபரண இராகத்திலிருந்து எடுத்துக் கொள்ளுகின்றது.

| | |
|---|---|
| விளக்கம் | – 01 புள்ளி |
| இராகம் | – ¼ + ¼ = ½ புள்ளி |
| ஆரோ, அவ | – ¼ + ¼ = ½ புள்ளி |

**(ஆ) பாஷாங்க இராகம்**

ஒரு இராகமானது, தனது தாய் இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்களுடன் ரஞ்சனையின் பொருட்டு வேறு ஸ்வரஸ்தானங்களை (அன்னிய ஸ்வரங்கள்) எடுத்துக் கொள்ளுமாயின் அவ் இராகம் பாஷாங்க இராகம் ஆகும்.
இத்தகைய இராகங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. ஆரோஹண –அவரோஹணத்திலேயே அன்னிய ஸ்வரத்தைக் கொண்டிருக்கும் இராகங்கள்.
2. ஆரோகண – அவரோகணத்தில் அன்னிய ஸ்வரம் ஒலிக்காமல் சஞ்சாரங்களில் மட்டும் அன்னிய ஸ்வரம் ஒலிக்கும் இராகம்.

– பாஷாங்க இராகத்தில் வரும் அன்னிய ஸ்வரங்களின் எண்ணிகைக்கையைக் கொண்டு,
  1. ஏகான்னிய ஸ்வர பாஷாங்க இராகம்
  2. த்வி அன்னிய ஸ்வர பாஷாங்க இராகம்
  3. திரி அன்னிய ஸ்வர பாஷாங்க இராகம்

உதாரணம் : பைரவி ஆ : ஸரிகமபத்நிஸ் அ : ஸ்நிதபமகரிஸ } 20இன் ஜன்னியம்

முகாரி ஆ : ஸரிமபநிதஸ் அ : ஸ்நித்பமகரிஸ } 22இன் ஜன்னியம்

விளக்கம் – 01 புள்ளி
இராகம் – ¼ + ¼ = ½ புள்ளி
ஆரோ, அவ – ¼ + ¼ = ½ புள்ளி

(இவ்வாறு வேறு பொருத்தமான உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருப்பினும் புள்ளிகள் வழங்கலாம்.)

**(இ) தைவதாந்திய இராகம்**

மத்தியஸ்தாயி தைவதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் தைவதாந்திய இராகம் ஆகும்.

உதாரணம் : குறிஞ்சி ஆ : ஸநிஸரிகமபத அ : தபமகரிஸநிஸ } 28இன் ஜன்னியம்

விளக்கம் – 01 புள்ளி
இராகம் – ¼ + ¼ = ½ புள்ளி
ஆரோ, அவ – ¼ + ¼ = ½ புள்ளி

(3x2 = 06 புள்ளிகள்)

(iii) **வர்ஜ இராக வகைகளைக் குறிப்பிடுக.**

- ஔடவ ஔடவம்
- ஷாடவ ஷாடவம்
- ஔடவ ஸம்பூர்ணம்
- ஷாடவ ஸம்பூர்ணம்
- ஔடவ ஷாடவம்
- ஷாடவ ஔடவம்
- ஸம்பூர்ண ஔடவம்
- ஸம்பூர்ண ஷாடவம்

(½ x8= 04 புள்ளிகள்)

(iv) **வக்ர இராகங்களை விளக்கி, அவற்றின் பிரிவுகளை ஒவ்வொரு உதாரணத்துடன் விளக்குக.**

ஆரோஹணத்திலாவது அவரோஹணத்திலாவது அல்லது இரண்டிலுமாவது ஸ்வரங்கள் கிரமகதியில் செல்லாது திரிந்து செல்லுமாயின் அதற்கு வக்ர இராகம் என்று பெயர். ஆரோஹணத்திலோ, அவரோகணத்திலோ எந்த ஸ்வரஸ்தானத்தில் ஆரோஹண கதிக்கு அல்லது அவரோஹண கதிக்கு மாறுதல் அதாவது பங்கம் அல்லது தடை ஏற்படுகிறதோ அந்த ஸ்வரத்திற்கு வக்ர ஸ்வரம் என்று பெயர்.

உதாரணம் : கதனகுதூகலம் ஆ : ஸரிமதாநிகபஸ்<br>அ : ஸ்நிதபமகரிஸ } 28இன் ஜன்னியம்

இந்த இராகத்தின் ஆரோஹணத்தில் 'நி' இல் இருந்து ஸ்வர கதி இறங்குவதனால் 'நி' வக்ர ஸ்வரம் எனப்படும். 'க' இலிருந்து மீண்டும் ஸ்வர கதி ஆரோஹணமாகச் செல்வதனால் 'க' வக்ராந்திய ஸ்வரமாகும். அதாவது வக்ரகதி பூர்த்தியாகும் ஸ்வரம் எனப்படுகிறது. நிஷாதத்திலிருந்து காந்தாரம் வரைக்கும் இறங்குவதில் ஏற்படும் இடைவெளிக்கு வக்ரத்துவத்தின் எல்லை எனப்பெயர். இது மூன்று வகைப்படும்.

1. ஆரோஹணம் மட்டும் வக்ரமாயுள்ள இராகங்கள்
   உதாரணம் : கமாஸ் ஆ : ஸமகமபதநிஸ்<br>அ : ஸ்நிதபமகரிஸ } 28இன் ஜன்னியம்

2. அவரோஹணம் மட்டும் வக்ரமாயுள்ள இராகங்கள்
   உதாரணம் : ஸ்ரீராகம் ஆ : ஸரிமபநிஸ்<br>அ : ஸ்நிபதநிபமரிகரிஸ } 22இன் ஜன்னியம்

3. ஆரோஹணமும் அவரோஹணமும் வக்ரமாயுள்ள இராகங்கள் (உபய வக்ர இராகங்கள்)
   உதாரணம் : நீலாம்பரி ஆ : ஸரிகமபதபநிஸ்<br>அ : ஸ்நிபமகரிகஸ } 22இன் ஜன்னியம்

வக்ர இராகங்களில் வரும் வக்ர ஸ்வரங்களின் எண்ணிக்கையைக் கொண்டு வக்ர இராகங்களை வகைப்படுத்தலாம்.

1. ஏக ஸ்வர வக்ர இராகம் –கமாஸ்
2. த்வி ஸ்வர வக்ர இராகம் – ஸ்ரீராகம்
3. திரி ஸ்வர வக்ர இராகம் –கர்நாடக பெஹாக்
4. சது ஸ்வர வக்ர இராகம் – அசாவேரி

விளக்கம் - 02 புள்ளி<br>
இராகம் - 02 புள்ளி<br>
ஆரோ, அவ - 02 புள்ளி<br>
(மொத்தம் – 06 புள்ளிகள்)

இவ்வினாவிற்கு வழங்கப்பட வேண்டிய மொத்தப் புள்ளிகள் : 04 + 06 + 04 + 06 = 20 புள்ளிகள்

**வினா இல : 03**

**பின்வரும் இசை உருப்படிகளுள் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றினை விளக்குக.**

(i) **பஞ்ச புராணத்திற்கு அடுத்ததாகப் பாடப்படும் உருப்படி**

(ii) **சூளாதி**

(iii) **இசைக்கச்சேரி, நாட்டியக் கச்சேரிகளில் இறுதியில் இடம்பெறும் உருப்படி**

(i) **திருவாசகம்**

- எட்டாந்திருமுறையுள் அடங்கும்.
- பக்திச்சுவை நிறைந்தது.
- திருவாசகம் எனும் சொல்லின் பொருள் – திருவுடைய சொற்களாலாகிய அருள் நூல் எனப்பொருள்படும்.
- சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 51 பகுதிகளையும் 656 பாடல்களையும் கொண்டது.
- அருளும்போதே இசையுடன் பாடப்பட்டதற்கு ஆதாரமாக,
  **'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து' (சிவபுராணம் வரி : 93),**
  **'சோதியை யாம்பாட..' (திருவெம்பாவை : 01)**
- திருவாசகப் பாடல்களுக்கு பண்ணமைதி குறிக்கப்படவில்லை.
- திருவாசகம் அனேகமாகச் சுத்தாங்கமாக மோகன இராகத்தில் பாடப்படுகிறது.
- சில திருவாசகங்கள் பண்ணாங்கமாகவும் பாடப்படுகிறது.
  **'பூசுவதும் வெண்ணீறு..' (திருச்சாழல்)**
  **'முத்திநெறி அறியாத..' (அச்சோப்பதிகம்)**
  **'கண்களிரெண்டும்..' (திருப்படையாட்சி)**
  மேற்கூறிய பாடல்கள் பழந்தக்க இராகப் பண்ணமைதியில் பாடப்பட்டு வருகின்றது.
- திருத்தெள்ளேணம், திருப்பொற்சுண்ணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், திருவெம்மானை ஆகியவை மகளிர் பலரால் இறைவனைப் புகழ்ந்து பாடும் பாடல்களாகும்.
  **உதாரணம் : 'கருணைக்கழல் பாடி..'**
- இவை பலர் கூடிப் பாடும்முறையில் இயற்றப்பட்டுள்ளதினால் இவை தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய பாடல்கள் என அறியலாம்.
- கோயில்களில் பாடப்படும் திருப்பொன்னூசல் நீலாம்பரி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படுகிறது. சில கோயில்களில் நவரோஜ் இராகத்திலும் பாடப்படுகிறது.
- சில திருவாசகப் பாடல்களின் பண் – இராகம் பின்வருமாறு :
  திருவெம்மானை – சீகாமரம் – நாதநாமக்கிரியா
  திருப்பொன்னூசல் – சாளரபாணி – ஆனந்த பைரவி
  திருச்சாழல் – பழந்தக்கராகம் – ஆரபி
  திருவெம்பாவை – புறநீர்மை – பூபாளம்
  திருத்தெள்ளேணம் – கும்மிமெட்டு
- இயற்றியவர் : மாணிக்கவாசகர்

உதாரணம் : "மெய்தானரும்பி"
"வானாகி மண்ணாகி"
"பால்நினைந்தூட்டும்"
"கண்களிரண்டும்"
"பூசுவதும் வெண்ணீறு "
"ஆதியும் அந்தமுமில்லா"
"மாலறியா நான் முகனும்"
"கீதம் இனிய குயிலே "

(இவ்வாறு வேறு பொருத்தமான உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருப்பினும் புள்ளிகள் வழங்கலாம்)

உருப்படியை இனங் கண்டிருப்பின் – 01 புள்ளி
விளக்கம் – 06 புள்ளி
இயற்றியவர் – 01 புள்ளி
உதாரணம் – 02 புள்ளி
(மொத்தம் –10 புள்ளிகள்)

(ii) **சூளாதி :**

- ஸுட எனும் கன்னட மொழியில் இருந்து தோன்றிய உருப்படி
- தாதுவின் அமைப்பில் கீதத்தை ஒத்திருக்கும்.
- சாகித்தியம் பக்திரசம் பொருந்தியதாக இருக்கும்.
- ஒரே இராகத்தில் 2, 5, 7 தாளங்களை சேர்த்து தாளமாலிகையாகவும் பாடப்படும்.
- தாளத்தின் முடிவிலும் இயற்றியவர் பெயர் அல்லது தெய்வத்தின் பெயர் முத்திரையாக இடம்பெறும்.
- ஆதிதாளம், இரட்டித்த மட்டிய தாளம் சூளாதியில் காணப்படும்.
- மத்திம காலத்தில் பாடப்படும்.
- புரந்தரதாஸர் கன்னட மொழியில் இயற்றியுள்ளார்.
- அன்னமாச்சாரியார் தெலுங்கில் இராக தாள மாலிகையாக இயற்றியுள்ளார்.
- பொன்னையாப்பிள்ளை தமிழில் பஞ்சதாள சூளாதிகளை இயற்றியுள்ளார்.
- தாளமாலிகைச் சூளாதிகளைக் கற்பதனால் தாளஞானம் விருத்தியடைகிறது.

உதாரணம் – "கதிரவன் குணதிசை"
"உழவர்களுடை..."
"ஆவினமெல்லாம்.."
"தித்தித்தன."
"பெருமானினதினை.."

- சூளாதிகளை இயற்றியவர்கள் – தஞ்சை .க.பொன்னையா பிள்ளை
புரந்தரதாஸர்
அன்னமாச்சாரியார்

விளக்கம் – 06 புள்ளி
இயற்றியவர் – 02 புள்ளி
உதாரணம் – 02 புள்ளி
(மொத்தம் –10 புள்ளிகள்)

(iii) **தில்லானா**

- மனதிற்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் மனமகிழ்ச்சியையும் கொடுப்பது தில்லானா.
- நாட்டியத்திற்குரிய உருப்படி எனினும் இதன் கவர்ச்சி காரணமாக இசைக் கச்சேரியின் இறுதியில் பாடப்படுகிறது.
- "திரிதில்லானா" என்ற தேசிய இசைமுறையிலிருந்து தோன்றியது.
- 18 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.
- இதன் தாது கவர்ச்சிகரமாகவும் மாது ஸ்வரங்கள் கலந்த ஜதிகளாகவும் சிற்சில இடங்களில் வார்த்தையாகவும் அமைந்திருக்கும்.
- இதன் வேகம் மத்திம காலத்தில் அமைந்திருக்கும்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்டது.
- சில பல்லவி அனுபல்லவியுடனும் சில பல்லவி சரணத்துடனும் அமைந்திருக்கும்.
- பல்லவி, அனுபல்லவி ஜதிகளைக் கொண்டதாகவும் சரணம் ஸ்வரங்களையும் வார்த்தைகளையும் ஜதிகளையும் கொண்டதாகவும் அமைந்திருக்கும்.
- நாட்டிய நிகழ்ச்சியில் ஏழாவதாக இடம்பெறும்.
- இசைக்கச்சேரிகளின் இறுதியிலும் காலட்சேபங்களிலும் இடம்பெறும்.
- ஆதி, ரூபக, சாபு தாளங்களில் அமைந்துள்ளன.
- தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் இயற்றப்பட்டுள்ளன.
- ஹிந்துஸ்தானி இசையில் "தரானா" என்ற உருப்படி வகைக்கு ஒப்பானது.
- மகாவைத்திய நாதய்யர் "கௌரிநாயக" எனும் தில்லானாவை கானடா இராகத்திலும் ஸிம்ஹநந்தன தாளத்திலும் இயற்றியுள்ளார்.
- இயற்றியவர் :
  - மஹாவைத்தியநாதய்யர்
  - குன்றக்குடி கிருஷ்ணய்யர்
  - வீரபத்திரஜயர்
  - லால்குடி ஜெயராமன்
  - பாலமுரளி கிருஷ்ணா

உதாரணம் :

- ஜம் ஜம் தரித
- நாதிரனா தொம்திரனா
- தீம் தானனன
- தீம் ததீம்த

| | |
|---|---|
| உருப்படியை இனங் கண்டிருப்பின் | - 01 புள்ளி |
| விளக்கம் | - 05 புள்ளி |
| இயற்றியவர் | - 02 புள்ளி |
| உதாரணம் | - 02 புள்ளி |

(மொத்தம் -10 புள்ளிகள்)

மேலே தரப்பட்டுள்ள உருப்படிகளுள் இரண்டினைப்பற்றி விரிவான இலட்சணம் எழுதியிருப்பின்
(02 X10 = 20 புள்ளிகள்)

## ‘இ’ பகுதி

**வினா இல : 04**

(i)**கிருதிகளை அலங்கரிக்கும் அணிகளுள் மாது சம்பந்தமான அணிகளைக் குறிப்பிடுக.**

அனுப்பிராசம், அந்தியப்பிராசம், யமகம் / மடக்கு, மணிப்பிரவாள ஸாஹித்தியம்
இவற்றுள் நான்கினையும் குறிப்பிட்டிருப்பின் (04 புள்ளிகள்)

(ii)**மாது சம்பந்தமான அணிகளுள் இரண்டினை உதாரணங்களுடன் குறிப்பிடுக.**

- அனுப்பிராசம் : இதற்கு இடையழகு என்று பெயர்.
  உதாரணம் : “எதுட நிலச்சிதே” –சங்கராபரணம் – தியாகராஜர் கிருதியில்
  “தரான தொரகனி பராகு நாயெட
  நுராமஜேசிதே சுரா சுரலுமெத்”
  இங்கு “ரா” என்னும் எழுத்து இடையிடையே வந்து இனிமை தருகின்றது.

- அந்திய பிராசம் : இதற்கு முடிவழகு என்று பெயர்.
  உதாரணம் : “கருணா சாகரா” – அடாணா – மாயூரம் வேதநாயகம்பிள்ளை கீர்த்தனையில்
  “நிச்சய ஞானமோ நினது சுவாதீனம்
  நீதராவிடில் எனக்கேது மெய்ஞ்ஞானம்”
  இங்கு ‘னம்’ எனும் எழுத்துக்கள் அந்நிய பிராசமாக வருகிறது.

- யமகம்/ மடக்கு : ஒரு பாடலில் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடன் பயன்படுத்தப்பட்டால் அது யமகம் /மடக்கு எனப்படும்.

  உதாரணம் : 1. ‘தெலிசிராம’ என்ற பூர்ணசந்திரிகா இராகத்தில் அமைந்துள்ள தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனையில் “ராமா” என்ற சொல் பெண்கள், பிரம்மன் என்ற இரு பொருள்களைக் குறிக்கின்றது.

  2. ‘கமலாம்பாம்பஜரே’ என்ற கல்யாணி இராகத்தில் அமைந்துள்ள தீட்சிதரின் கீர்த்தனையில் “கமலா” என்ற சொல் பார்வதி, லட்சுமி, திருவாரூர், தாமரை முகம் என்ற நான்கு பொருள்களைக் குறிக்கின்றது.

  3. ‘நீயே மனமகிழ்வுடன்’ என்ற கல்யாணி இராகத்தில் அமைந்துள்ள இராமசாமி சிவனின் கீர்த்தனையின் சரணத்தில் “தனியே” என்ற சொல் பிற சொற்களுடன் சேர்ந்து ஐந்து பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

- மணிப்பிரவாள ஸாஹித்தியம் : ஒரு கிருதியின் ஸாகித்தியத்தில் இசையாப்பிலக்கண ஒழுங்குகளுக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வருமாயின் அது மணிப்பிரவாள ஸாஹித்திய அணி எனப்படும்.

உதாரணம் :1. 'நீஸரிஸமான' – பைரவி இராக கிருதியின் ஸாகித்தியத்தில் தெலுங்கு, தமிழ் என்னும் இரு மொழிகள் கலந்து வருகின்றன.

2. 'வெங்கடாசலபதே' – காபி –தீட்சிதர். இதில் ஸமஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று மொழிகள் கலந்து வருகின்றன.

இரு விளக்கத்திற்கு – 01 + 01 = 02 புள்ளிகள்
இரு உதாரணங்களுக்கு – 01 + 01 = 02 புள்ளிகள்
மொத்தம் – (04 புள்ளிகள்)

(iii) **சொற்கட்டு ஸ்வரம், சொற்கட்டு சாகித்தியம் என்பவற்றை உதாரணங்களுடன் விளக்கி, அவற்றிற்கிடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.**

– சொற்கட்டு ஸ்வரம் : சிட்டை ஸ்வரத்தின் இடையிடையே சொற்கட்டுக்கள் (ஜதிகள்) அந்தந்த ஸ்வரங்களின் இசைக்குப் பாடப்படுமாயின் அது சொற்கட்டு ஸ்வரம் எனும் அணியாகும். இது நர்த்தன சம்பந்தமுள்ள தெய்வங்களின் உருப்படிகளில் பொருத்தமாகச் சேர்க்கலாம். கணபதி, கிருஷ்ணர், நடராஜர் மீதுள்ள கீர்த்தனங்களில் சொற்கட்டு ஸ்வரங்களைக் காணலாம்.

உதாரணம் : "ஆனந்த நடனப்பிரகாசம்" – கேதார இராகம் – தீட்சிதர்
"ஆனந்த நடமாடுவார்" –பூர்வி கல்யாணி – நீலகண்ட சிவன்
"ஶ்ரீமகா கணபதி" – கௌளை –முத்துஸ்வாமி தீட்சிதர்

– சொற்கட்டு ஸாஹித்தியம் : சாகித்தியத்தின் நடுவே சொற்கட்டுக்கள் வருமாயின் அது சொற்கட்டு சாகித்தியம் எனும அணியாகும். இதில் இரு பிரிவுகள் உள்ளன.

1. சொற்கட்டுக்கள் சொல்லணியாக மட்டும் வருதல்.

உதாரணம்: "நடனம் செய்யும் பாதனார்" என்ற கேதாரகௌளை இராக இராமசாமி சிவனால் இயற்றப்பட்ட கிருதியில் 'திமிதாம் ததிங்கிணதோம்' என்று வருகின்றது

2. சொற்கட்டுக்கள் சொல்லணியாகவும் பொருளணியாகவும் சிலேடையாகவும் வருதல்

உதாரணம் : 'ஆடியபாத' என்ற கோபாலகிருஷ்ண பாரதியாரது சங்கராபரண இராகக் கிருதியில் சரணங்களின் இறுதியில் பின்வருமாறு வருகின்றது.
'சாலோகாதி பதவியும் தந்தோம் தந்தோம் தந்தோம் என்றாடிய பாதா'
இவ்வரியில் தந்தோம் என்ற பதம் சொற்கட்டாகவும் கொடுத்தோம் என்ற பொருளிலும் வருகின்றது.

உதாரணம் : 'நந்தி மத்தளம் போடவும் தகும் தகும் என்றாடிய பாதா' என்பதில் தகும் எனும் சொற்கட்டு, தகும் எனும் சொல் பொருத்தம் பொருத்தம் எனப் பொருள்படுகின்றது.

உதாரணம் : 'திருச்சிற்றம்பலத்தானும் தாம்தாம் தாம்தாம் தாம்தாம் என்றாடிய பாதா' என்பதில் தாம் – சொற்கட்டு, தாம் தாம் – நான்தான் நான்தான் எனப் பொருள்படும்.

இரு விளக்கத்திற்கும் – 1½ + 1½ = 03 புள்ளிகள்
உதாரணத்திற்கு – 01 + 01 = 02 புள்ளிகள்

**சொற்கட்டுஸ்வரம், சொற்கட்டு ஸாஹித்தியம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு :**

ஸாகித்தியத்தின் இடையே சொற்கட்டும் (ஜதி), ஸ்வரமும் இணைந்து வருவது சொற்கட்டு ஸ்வரமாகும் ஆனால் ஸாகித்தியத்தினிடையே சொற்கட்டுகள் (ஜதி) வருவது சொற்கட்டு ஸாகித்தியமாகும்.

(01 புள்ளி)

மொத்தப் புள்ளிகள் 03+ 02+01 =06 புள்ளிகள்

iv. **மத்திமகால சாகித்திய அணியினை உதாரணங்களுடன் விளக்குக.**

- இவ்வணி தாது மாது சம்பந்தமான அணிகளுள் ஒன்றாகும்.
- கிருதியின் ஏதாவதொரு அங்கத்தின் முடிவிலுள்ள ஆவர்த்தனங்கள் துரித நடை மாற்றம் பெற்று மத்திம காலத்தில் அமைவதே மத்திம கால சாகித்தியம் ஆகும்.
- பொதுவாக விளம்ப (சௌக்க) நடையில் அமைந்துள்ள கிருதிகளுக்கு அணியாக விளங்குவது மத்திமகால சாகித்தியம் ஆகும்.

- முத்துஸ்வாமி தீட்சிதரின் பல கிருதிகளில் இந்த மத்திமகால சாகித்தியம் அமைந்துள்ளது.

உதாரணம் :1). “ஶ்ரீசரஸ்வதி” – ஆரபி – ரூபகம் – முத்துஸ்வாமி தீட்சிதர்,
இதில் பல்லவியிலேயே மத்திம கால சாகித்தியம் அமைந்துள்ளது.

2) “காமாட்சி காமகோடி” –சிம்மேந்திர மத்திமம் – ரூபகம்,
இதில் முத்துஸ்வாமி தீட்சிதர் அனுபல்லவியின் இறுதியிலும் சரணத்தின் இறுதியிலும் மத்திமகால சாகித்தியத்தை அமைத்துள்ளார்.

சில கீர்த்தனைகளின் சரணம் மத்திமகால சாகித்தியத்திலேயே அமைந்துள்ளன.

உதாரணம் : ‘யோசனா கமல’ – தர்பார்–ஆதி –தியாகராஜர்
‘ஆடிக் கொண்டார் – மாயாமாளவகௌளை –ஆதி –முத்துத்தாண்டவர்

விளக்கத்திற்கு = 04 புள்ளிகள்
இரு உதாரணங்களுக்கு - 01 + 01 = 02 புள்ளிகள்
மொத்தம் 04 + 02 = 06 புள்ளிகள்

இவ்வினாவிற்கு வழங்கப்பட வேண்டிய மொத்தப் புள்ளிகள் : 04 + 04 + 06 + 06 = 20 புள்ளிகள்

**வினா இல : 05**

(i) **20 ஆம் நூற்றாண்டில் பிரபல்யம் பெற்ற இந்திய இசைக் கலைஞர்களுள் பெண் இசைக் கலைஞர்கள் இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.**

(i) M.S.சுப்புலட்சுமி

(ii) M.L.வசந்தகுமாரி

இருவரின் பெயர் குறிப்பிட்டிருப்பின் (02 +02= 04 புள்ளிகள்)

(ii) **மேலே (i) குறிப்பிட்ட பெண் இசைக் கலைஞர்கள் இருவரினதும் வாழ்க்கை வரலாற்றினைத் தனித்தனியே எழுதுக.**

(i) M.S.**சுப்புலட்சுமி**

- தனது குரல் இனிமையால் பார் முழுவதும் புகழ்க் கொடியை நாட்டியவர்.
- இவர் மதுரையில் பிரபல வீணைக் கலைஞராக இருந்த ஷண்முகவடிவின் மகளாக 1916 ஆண்டுடில் பிறந்தார்.
- சிறு வயதிலேயே இசைத் தட்டுக்குப் பாடியவர்.
- 13 ஆம் வயதில் மேடையேறியவர்.
- சகுந்தலை, சாவித்திரி, மீரா போன்ற திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.
- 1940 இல் சதாசிவம் என்பவரை மணந்தார். இவரது கணவர் இவரது இசைப்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.
- நிதியுதவி பெற்றுக் கொடுப்பதற்காக பல இசைக் கச்சேரிகளை அளித்துள்ளார்.
- பஜனைப் பாடல்களைப் பாடுவதில் திறமை மிக்கவர்.
- மகாத்மா காந்தி தனது பிறந்த நாளன்று 'ஹரிதும் ஹரோ' என்ற பஜனை பாட வேண்டும் என விரும்பியதும் எம்.எஸ். அப்பாடலை ஒலிப்பதிவு செய்து டெல்லிக்கு அனுப்பியதாகவும் கூறப்படுகிறது.
- மதுரை ஸ்ரீனிவாஸஐயங்கார், வி.வி.கிருஷ்ணையர், பாலசரஸ்வதி, செம்மங்குடி, முசிரி, கே.எஸ்.நாராயணசாமி, டாக்டர்.இராமநாதன் ஆகியோரிடம் இசை கற்றுத் தம் சங்கீதத்தை விருத்தி செய்தார்.
- 1956 இல் ஜனாதிபதி விருது, பாரதரத்னா, தேசி கோத்தம போன்ற பல விருதுகளைப் பெற்றார்.
- 1981 இல் ஆந்திரப் பிரதேச ஆஸ்தான சங்கீத விதுஷமணி கௌரவமும், அதே ஆண்டில் அகில உலக மியூசிக் கௌன்சிலின் கௌரவ அங்கத்தினராகவும் தெரிவு செய்யப்பட்டார்.
- 1966 இல் ஐ.நா. சபையில் பாடும் வாய்ப்பு ஏற்பட்டது.
- மேல் நாடுகள் பலவற்றிற்குச் சென்று இசைக் கச்சேரிகள் செய்தார்.
- 1969 இல் மியூசிக் அகடமி முதன்முறையாக ஒரு பெண் கலைஞரான இவருக்கு சங்கீத கலாநிதி விருதை வழங்கியது.
- 1974 இல் பிலிப்பைன்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருதான 'மக்சாசாய்' விருது பெற்றார்.

(04 புள்ளிகள்)

(ii) M.L.**வசந்தகுமாரி :**

- இவரது குரு ஜி.என். பாலசுப்ரமணியம்
- குருவின் சிறப்பம்சங்களைக் கடைப்பிடித்ததோடு, அவரைப் போலவே கர்நாடக இசையின் சிகர விருதான 'சங்கீத கலாநிதி' என்னும் பட்டத்தைப் பெற்று அவர் வழியில் சிஷ்யமணிகளையும் உருவாக்கிய பெருமைக்குரியவர்.
- இளவயதிலேயே மேடையேறித் தன் இனிய குரலினால் இரசிகர்களைக் கவர்ந்தவர்.
- திரை உலகிலும் புகழ் பெற்றவர்.
- அயல் நாடுகளிலும் கர்நாடக இசையின் பெருமையை நிலை நாட்டியவர்.
- 03.07.1928 இல் இசைப் பரம்பரையில் பிறந்தவர்.
- தந்தையார்– அய்யாசாமி, தாய் – லலிதாங்கி
- 12 வது வயதில் தாயாருடன் இணைந்து கச்சேரிகளில் பங்கேற்றவர்.
- இரண்டு ஆண்டுகளின் பின் தனியாகவே கச்சேரிகளைச் செய்யத் தொடங்கினார். தாயார் சுகயீனம் காரணமாக போக முடியாமல் இருந்ததால் இவரால் கச்சேரி செய்யப்பட்டது. அந்த முதல் கச்சேரியே எம்.எல்.வி. என்ற நாமகரணமும் அளிக்கப்பட்டது.
- 1938 இல் ஜி.என்.பி. இடம் இசைகற்று மெருகேறினார்.
- டாக்டராக வேண்டும் என்ற குறிக்கோளையும் வளர்த்துக் கொண்டார்.
- 27.07.1976 இல் மைசூர் பல்கலைக்கழகம் இசைத்துறையில் டாக்டர் பட்டம் வழங்கியது.
- ஒவ்வொரு வருடமும் புரந்தரதாஸர் விழாவில் பங்கேற்றுச் சிறப்பாகப் பாடினார்.
- 1969 இல் செம்பை வைத்தியநாத பாகவதரால் ஆராதனைக் கமிட்டியின் சார்பில் எம்.எல்.வி.க்கு 'சங்கீத ரத்னாகரம்' என்ற சிறப்புப் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டது.
- 1954 இல் சென்னை ஆர்ட்ஸ் அகடமியால் ராஜமாணிக்கம்பிள்ளை 'சங்கீதவாணி' எனும் விருதினை வழங்கினார்.
- முதலமைச்சர் எம்.பக்தவத்சலம் அவர்களால் 'திருப்பாவைமணி' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.
- 1967 இல் இசைத்தட்டுக்களில் திருப்பாவைப் பாடல்கள் பாடியமைக்காக 'பத்மபூஷண்' விருது பாரத அரசிடமிருந்து கிடைக்கப் பெற்றது.
- மலாயா வாழ் இந்தியர் நிவாரண நிதிக்காக சென்னையிலும் இலங்கை நாவலப்பிட்டிய கதிரேசன் கல்லூரி கட்டட நிதிக்காகப் பல இலவசக் கச்சேரிகளும் செய்தார்.
- 1964 இல் சீன ஆக்கிரமிப்பின்போது நாட்டுப் பற்றினால் தாம் அணிந்திருந்த நகைகள் முழுவதையும் நாட்டு நலனுக்காக வழங்கினார்.
- இவர் உருவாக்கிய சிஷ்யர்களுள் முக்கிய மாணவர்கள் சாருமதி இராமச்சந்திரன், நிர்மலா ஸ்ரீனிவாஸன், சுதா ரகுநாதன் ஆகியோராவர்.

(02 X04= 08 புள்ளிகள்)

(iii) **அப்பெண் இசைக்கலைஞர்கள் கர்நாடக இசைக்காற்றிய பணியினை விபரிக்குக**

(i) M.S.**சுப்புலட்சுமி**

- சகுந்தலை, சாவித்திரி, மீரா போன்ற திரைப்படங்களில் நடித்துப் பாடல்கள் பாடியமை (பாடல்கள் தொடர்பான விபரங்கள்)
- நிதி திரட்டுவதற்காக கச்சேரிகள் செய்த விபரம்.
- 1981 இல் உலக மியூசிக் கௌன்சிலில் அங்கத்தவராக தேர்வு செய்யப்பட்டமை.
- பிற நாடுகளுக்குச் சென்று கச்சேரிகள் நடாத்தியமை.
- பாடல்கள் பாடும்போது பொருள் உணர்ந்து பதங்களைப் பிரித்துச் சிறந்த முறையில் பாடல்களைப் பாடுவார்.
- இவரின் இசைப் பாடல்கள் அனேகமானவை பக்தி சார்ந்திருந்தல்.

- அன்னாருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

(ii) M.L.**வசந்தகுமாரி :**

- இளவயதில் கச்சேரிகள் செய்யும் ஆற்றலைக் கொண்டிருந்த விபரங்கள்.
- திரையுலகிலும் புகழ்பெற்ற விபரங்கள்.
- அயல்நாடுகளில் கர்நாடக இசை மூலமாக பெருமையை நிலைநாட்டிய விபரங்கள்..
- புரந்தரதாஸர் விழாவில் பாடியமை.
- இசைத்தட்டில் திருப்பாவை பாடியமை.
- செய்முறை விளக்கத்தோடு கூடிய சொற்பொழிவாற்றினார்.
- மலாயா வாழ் இந்தியர் நிவாரண நிதிக்காக சென்னையில் கச்சேரி நடாத்தினார்.
- இலங்கை நாவலப்பிட்டிய கதிரேசன் கல்லூரி கட்டட நிதிக்காகப் பல இடங்களில் கச்சேரிகள் செய்தார்.
- இவரால் உருவாக்கப்பட்ட சிஷ்யர்கள் – சாருமதி இராமச்சந்திரன், நிர்மலா ஸ்ரீனிவாஸன், சுதா ரகுநாதன் போன்றோர்கள் ஆவர்.

(04 x02= 08 புள்ளிகள்)

இவ்வினாவிற்கு வழங்கப்பட வேண்டிய மொத்தப் புள்ளிகள் : 04 + 08 + 08 = 20 புள்ளிகள்

**வினா இல : 06**

**பின்வரும் இராகங்களில் இரண்டினைத் தெரிவு செய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்.)**

(i) **ஹிந்தோளம்**
(ii) **மூன்று அன்னியஸ்வரங்களைக் கொண்ட ஔடவ வக்ர சம்பூர்ண இராகம்**
(iii) **பைரவி**
(iv) **கமதநி-தமகரி-நிநிதம-தநிஸ்ா எனும் சஞ்சாரத்திற்குப் பொருத்தமான ஷாடவ இராகம்**

(i) ஹிந்தோளம்
(ii) ஹிந்துஸ்தான் காபி
(iii) பைரவி
(iv) ஸ்ரீரஞ்சனி

- ஜன்னிய இராகமாயின் தாய் இராகத்தினைக் குறிப்பிட்டிருப்பின், அல்லது தாய் இராகத்தின் மேள எண்ணைக் குறிப்பிட்டிருப்பின் அல்லது இராகத்தினை இனங்கண்டிருப்பின் (01 புள்ளி)
- ஆரோஹண, அவரோஹணத்தினைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)
- ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)
- ஜீவ, நியாஸ, கிரக ஸ்வரங்களைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)
- இராக விபரம் எழுதியிருப்பின் (02 புள்ளிகள்)
- இரண்டு உருப்படிகள் எழுதியிருப்பின் (02 புள்ளிகள்)
- பொருத்தமான சஞ்சாரம் எழுதியிருப்பின் (02 புள்ளிகள்)

ஒரு இராக இலட்சணத்திற்கு (01+01+01+01+02+02+02+10) புள்ளிகள் வீதம்

இரண்டு இராக இலட்சணங்களுக்கும் : 10 + 10 = (20 புள்ளிகள்)

**வினா இல : 07**

(i) **வயிற்றுடன் அணைத்துக் கொண்டு வாசிக்கப்படும் துணைத்தாள வாத்தியத்தினைக் குறிப்பிடுக.**

கடம் எனக் குறிப்பிடப்பட்டிருப்பின்

(02 புள்ளிகள்)

(ii) **மேலே (i) இல் குறிப்பிட்ட வாத்தியத்தினை வரைந்து, அதன் பாகங்களைக் குறித்துப் பெயரிடுக.**




படம் - 02 புள்ளிகள்
பாகம் - 04 புள்ளிகள்
மொத்தம் = 06 புள்ளிகள்

(iii) **கெஞ்சிரா வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி, இவ்வாத்தியத்தினை வாசிப்பதில் பிரபல்யமான கலைஞர்கள் மூவரின் பெயரினைத் தருக.**

அமைப்பு :

- கெஞ்சிரா வாத்தியமானது 6" விட்டமும் ½ " கனமும் கொண்டமைந்த கருவியாகும்.
- இந்த கருவியினுடைய ஒருபகுதி உடும்புத் தோல் ஒட்டப்பட்டிருக்கும்.
- ஒரு பகுதியில் இரண்டு செப்புக் காசுகள் பொருத்தப்பட்டிருக்கும்.
- பிரபலமான கலைஞர்கள் : (1) பழனி சுப்பிரமணியபிள்ளை
  (2) சேவுக பாண்டிய தேவர்
  (3) பாலக்காடு T.S.மணி

அமைப்பு - 03 புள்ளிகள்
கலைஞர்கள் - 03 புள்ளிகள்
மொத்தம் = 06 புள்ளிகள்

(iv) **முகர்சிங் வாத்தியம் வாசிக்கப்படும் முறையினை விளக்குக.**

- முகர்சிங் வாத்தியத்தின் வளைவான பகுதியை கையினால் சேர்த்துப் பிடித்துக் கொண்டு நடுத்தகட்டில் வளைந்த நுனியை வலது கை ஆட்காட்டி விரலினால் மீட்டி வாசிக்கப்படும்.
- இக்கருவியை வாசிப்பவருடைய வாயின் உட்பகுதியே ஒலிபெருக்கியாக அமைகிறது.
- ஜதிச் சொற்களைச் சொல்வதில் திறமையுள்ளவர் சிறந்த முறையில் சரியாகத் தொகுத்து இக்கருவியை இசைக்க முடியும்.

வாத்தியத்தின் வாசிக்கும் முறையை விளக்கியிருப்பின் - 06 புள்ளிகள்

இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் : 02 + 06 + 06 + 06 = 20 புள்ளிகள்

**வினா இல : 08**

(i) **20 ஆம், 21 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் கர்நாடக இசையின் வளர்ச்சி பற்றி விளக்குக.**

- கி.பி. 1904 ஆம் ஆண்டு சுப்பராம தீட்சிதர் 'சங்கீத சம்பிரதாய பிரதர்சினி' என்ற நூலை இயற்றினார். இந்நூலில் அடங்கியுள்ளவை : அபூர்வமான உருப்படிகள், வேங்கடமகியின் மரபு வழி வந்தோர் இசை வடிவங்கள், முத்துஸ்வாமி தீட்சிதரின் வர்ணங்கள், இராமசுவாமி தீட்சிதரின் இராகமாலிகைகள், 176 இயலிசைப் புலவர்களின் வாழ்க்கை வரலாறுகள்.
- A.M.சின்னசாமி முதலியார் – Oriental Music European Notation, கோதண்டபாணிப்பிள்ளை ஆக்கிய 'பழந்தமிழிசை' என்ற நூல், டாக்டர். S.இராமநாதன் எழுதிய சிலப்பதிகார இசைத்தமிழ், டாக்டர்.வீ.ப.கா. சுந்தரம் – தமிழிசைவளம், 'பழந்தமிழிசை இலக்கியத்தில் இசை' போன்ற நூல்கள்
- தேசாதி, மத்யாதி தாளங்களின் பிரசித்தம்.
- அண்ணாமலைச் செட்டியாரின் காவடிச்சிந்துப் பாடல்கள்.
- 20ம் நூற்றாண்டின் தமிழிசை எழுச்சிக் காலம்.
- சுப்பிரமணிய பாரதியார், தேசிகவினாயகம்பிள்ளை ஆகியோரின் பாமர இசைப்பாடல்கள்.
- பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களின் தமிழ், ஆங்கில மொழிகளின் வெளியீடு.
- கோடீஸ்வரஜயர், மாயூரம் விஸ்வநாத சாஸ்திரி, திருவாரூர் இராமசாமிப்பிள்ளை, கூறைநாடு நடேசபிள்ளை போன்றோரின் தமிழ்ப் பாடல்கள் மூலம் தமிழிசைக்கான பங்களிப்பு.
- 20ம் நூற்றாண்டின் தலைசிறந்த வாக்கேயகாரரான பாபநாசம் சிவன் அவர்களின் இசைப்பணி.
- வீணைவரதய்யா, G.N.பாலசுப்பிரமணியம் , வீணைகுப்பையர், M.M.தண்டபாணி தேசிகர் போன்றோரின் உருப்படி ஆக்கங்கள்.
- மகாராஜபுரம் விஸ்வநாதையர் தொடக்கம் லால்குடி ஜெயராமன் வரை குறிப்பிடப்பட்டுள்ள வித்துவான்களின் இசைப்பணி.
- வானொலி, இசைநாடா, இசைத்தட்டு, இசைச் சஞ்சிகைகள், இசை விழாக்கள், இசைக் கருத்தரங்குகள், மாநாடுகள் என்பவற்றினால் கர்நாடக் இசையின் செல்வாக்குகள்.
- தென்னிந்திய தமிழ்ப் பல்கலைக்கழகங்களில் இசைப் பட்டப்படிப்புக்கள் நடாத்தல்.
- இந்திய இசைக்கலைஞர்களின் வெளிநாட்டு இசைக் கச்சேரிகள்.
- கிராமிய இசை, பண்ணிசை என்பவற்றின் வளர்ச்சி
- இளம் தலைமுறை இசைக்கலைஞர்களின் (சுதா ரகுநாதன், உன்னிக்கிருஷ்ணன் போன்றோர்) பங்களிப்பு.
- ஜானகி, சுசீலா, சௌந்தரராஜன், யேசுதாஸ் போன்றவர்களினால் மெல்லிசைக்கு ஆற்றிய பங்களிப்பு.
- மெண்டலின் ஶ்ரீனிவாஸன், சக்ஸபோன் கத்ரிகோபால்நாத் மற்றும் மெல்லிசை பாடல்களில் ஓகன் வாத்திங்களின் முக்கியத்துவம்

- பிற இசைகளிலுள்ள சிறப்பம்சங்கள் கர்நாடக இசையில் உள்வாங்கப்பட்டமை.
- பல்கலைக்கழகங்களில் இசைப்பட்டப் படிப்புக்கள் மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் ஏற்பட்டதனால் கர்நாடக இசைக்கு ஓர் அங்கீகாரம் ஏற்படலானது.
- சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்ப்பல்கலைக்கழகம் – ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்டப்படிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை
- பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த ஏனைய இசைக்கல்லூரிகளில் வாத்தியம், குரலிசை, பண்ணிசை போன்ற துறைகளில் பட்டப்படிப்புகள் உருவாக்கப்பட்டமை
- சதுர்த்தண்டிப் பிரகாசிகை, நாட்டிய சாஸ்திரம் போன்ற நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டமை.
- இசைக்கலைஞர்களை ஊக்குவிக்கும் பட்டங்கள், விருதுகள் ஆண்டு தோறும் வழங்கப்பட்டமை. (எடுத்துக்காட்டாக : கலைமாமணி, சங்கீதகலா நிபுணர், பத்மபூஷண் போன்றன.)
- இசைத்துறை வளர்ச்சியில் இணையத்தளத்தின் பங்களிப்பு

இவ்வினாவிற்குரிய மொத்தப்புள்ளிகள்– 20

(ii) **நீர் பார்த்து இரசித்த கர்நாடக இசைக் கச்சேரியொன்றில் இடம்பெற்ற மனோதர்ம சங்கீதப் பிரிவுகளை இனங்கண்டு, அவை பற்றி விமர்சிக்குக.**

- இசைக்கச்சேரி தொடர்பான சிறிய அறிமுகம் – 01 புள்ளி
  (இடம், காலம், மேடையமைப்பு, கலைஞர் பற்றிய குறிப்புக்கள்)
- இராக ஆலாபனையினை இரசித்தது தொடர்பான குறிப்புக்கள் – 03 புள்ளிகள்
- தானம் தொடர்பாக கிரகித்து இரசித்த விடயங்கள் – 03 புள்ளிகள்
- பல்லவியின் அமைப்பு மற்றும் பாடும் முறை போன்றவற்றைக் குறிப்பிடல். – 03 புள்ளிகள்
- நிரவல் பாடப்பட்ட முறையினைக் குறிப்பிடல். – 03 புள்ளிகள்
- கற்பனாஸ்வரம் பாடும் முறையில் இரசித்தவற்றைக் குறிப்பிடல். – 03 புள்ளிகள்
- பக்க வாத்திய ஒத்திசைவு தொடர்பான விடயங்கள் – 01 புள்ளி
- இசைக்கலைஞர் பாடிய/ வாசித்த முறை , ஆற்றுகை முறை என்பவற்றினை விபரித்தல். – 01 புள்ளி
- ஆற்றுகையின் நிறை, குறை தொடர்பான கருத்துக்கள் – 02 புள்ளிகள்

இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் : 01 + 03 + 03 + 03 + 03 + 03 + 01 + 01 + 02 = 20 புள்ளிகள்